முருகப்பெருமான் துணை

**மகான் யோகானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.08.2023**, வியாழக்கிழமை

1. பொதிகை வேந்தனாய் பிரணவப்பிரியனாய்
புகழாரம் கொண்டு அவதாரம்
பூதலத்தில் கண்டு அரங்கனே
புகலுவேன் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது யாளி திங்கள்
குறைவிலா சப்தம திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 07 ம் நாள், 24.08.2023, வியாழக்கிழமை)
அறிவுரை ஆசிதனை இனிதே
அருளுவேன் யோகானந்தர் யானும்
3. யானும் உரைக்க எங்கும் தருமம்
உயர்வாக நடத்தி தருமபலமோடு
ஞானவான்கள் பெருகும் வண்ணம்
நம்பிக்கை தந்தருளும் ஞானியே
4. ஞானியே நவகோடி ஞானிகளை
ஞாலமதில் படைக்க வேண்டி
கனிவேலவன் ஞானமருளும்
கந்தமகா சூட்சுமம் கண்ட தேசிகனே
5. தேசிகனே சரவணச்சுடரேற்றி
தேசமெங்கும் தெய்வீகம் பரவ
ஆசிதந்து ஞான வரம் தரும்
ஆறுமுக அரங்கமகானே
6. மகானே உன் கரங்கள் பட
மகாமந்திர தீட்சை பெறும்
யுகமக்கள் அனைத்து பேரும்
உருவாகுவர் ஞானிகளாக

7. ஆகவே கலியினில் மாற்றம்
ஆறுமுகனார் செய்து வர
வகைபட உடன் அனுகியே
வரம் கேட்கும் அனைவருக்கும்
8. அனைவருக்கும் ஞானிகள் ஆகும்
அனுமதி அரியவாய்ப்பு தானும்
துணைபட வேலவன் கருணைபட
தேசிகன் வழிகாட்டலில் கிட்டும்
9. கிட்டவே இந்தவித ஞானப்படை
குவலயம் முழுக்க நிரம்ப
தட்டாது சமூக மாற்றமாக
தலைவன் முருகனை வணங்கும்
10. வணங்கும் ஒரே வழிபாடு
வையகம் எங்கிலும் தழைத்து
இணங்கி சைவ நெறி ஏற்று
எவ்வுயிரும் தன் உயிராய் மதித்து
11. மதித்துப் போற்றும் சமூகமாற்றம்
மனுநீதி காக்கும் ஞான ஆட்சி
பூதலத்தில் எங்கும் உருவாகி
புகலுவேன் ஞானயுகமாற்றம் நிகழும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—